# KS Rangasamy
## College of Arts and Science
Autonomous | Tiruchengode

Volume 1, Issue 1 Date : June 2024 to Oct 2024



***Complied By***

THE NECTOR LIBRARY
K.S.RANGASAMY COLLEGE OF ARTS AND SCIENCE (Autonomous)

KSR Kalvi Nagar, Tiruchengode - 637 215,

Namakkal Dist, Tamil Nadu, INDIA.

***Prepared By***

Ms. R.Monisha, Library Assistant ( KSRCAS)

# KSRCAS NEWS MEDIA CLIPPINGS – 2024-2025

**Name of the Newspaper:** Dhinamani

**Date** : 05.10.2024

**Programme** : Entrepreneurship Conference

**Organized by** : K S R Educational Institutions

## கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனத்தில் தொழில் முனைவோர் மாநாடு



நாமக்கல் அக் 7

கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்கள், கே.எஸ். ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை சார்பாக தொழில்முனைவோர் மாநாடு வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இம்மாநாட்டை கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர். சீனிவாசன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். கே.எஸ். ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் வி. பத்மநாபன் வரவேற்றுப் பேசினார். முதன்மை திட்ட அலுவலர் எஸ். பாலுசாமி, நிர்வாக இயக்குநர் வி.மோகன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை மதுரா டிராவல் சர்வீஸ் நிறுவனர் தலைவர் வி.கே.டி. பாலன், கிஸ்ப்ளோ நிறுவனரும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். வி.கே.டி. பாலன் பேசியதாவது:

மாணவர்கள் ஒவ்வொருவரும் தொழில்முனைவோராக மாற வேண்டும். நம் நாட்டில் தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. சமூக ஊடகங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். விசாலமான அறிவும் தொடர்பும் நல்ல நிறுவனத்தை நிலை நிறுத்த உதவும். தொழில்முனைவோரிடம் நேர்மை, நாணயம், கடின உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம் என்றார்.

சுரேஷ் சம்பந்தம் பேசியதாவது:

மாணவர்கள் தங்களுடைய துறையில் சிறந்து விளங்குவதற்கு ஆளுமை திறன். ஆங்கிலத்தில் பேச்சு திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். இந்நிகழ்வில் கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் கல்லூரி முதல்வர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

**Name of the Newspaper:** Dhinabhoomi

**Date** : 05.10.2024

**Programme** : Entrepreneurship Conference

**Organized by** : K S R Educational Institutions

# கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனத்தில் தொழில்முனைவோர் மாநாடு



திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற தொழில்முனைவோர் மாநாட்டில் பங்கேற்றோர்.

**திருச்செங்கோடு, அக். 4:** கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்கள், கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை சார்பாக தொழில்முனைவோர் மாநாடு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இம்மாநாட்டை கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர். சீனிவாசன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் வி. பத்மநாபன் வரவேற்றுப் பேசினார். முதன்மை திட்ட அலுவலர் எஸ். பாலுசாமி, நிர்வாக இயக்குநர் வி.மோகன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை மதுரா டிராவல் சர்வீஸ் நிறுவனர் தலைவர் வி.கே.டி. பாலன், கிஸ்ப்ளோ நிறுவனரும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

வி.கே.டி. பாலன் பேசியதாவது:

மாணவர்கள் ஒவ்வொருவரும் தொழில்முனைவோராக மாற வேண்டும். நம் நாட்டில் தொழில்வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. சமூக ஊடகங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். விசாலமான அறிவும் தொடர்பும் நல்ல நிறுவனத்தை நிலை நிறுத்த உதவும். தொழில்முனைவோரிடம் நேர்மை, நாணயம், கடின உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம் என்றார்.

சுரேஷ் சம்பந்தம் பேசியதாவது:

மாணவர்கள் தங்களுடைய துறையில் சிறந்து விளங்குவதற்கு ஆளுமை திறன், ஆங்கிலத்தில் பேச்சு திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

**Name of the Newspaper:** **Malaimurasu**

**Date** : **05.10.2024**

**Programme** : **Entrepreneurship Conference**

**Organized by** : **K S R Educational Institutions**

# கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனத்தில் தொழில் முனைவோர் மாநாடு!

திருச்செங்கோடு, அக்.5–

திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்கள், கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) மேலாண்மை துறையின் சார்பாக தொழில் முனைவோர் மாநாடு2024 நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.



இந்நிகழ்வை கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சீனிவாசன் தலைமையேற்று துவக்கி வைத்தார். கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பத்மநாபன் வரவேற்புரை வழங்கினார்.

நிர்வாக இயக்குனர் [illegible] வாழ்த்தி பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மதுரா டிராவல்ஸ் சர்வீஸ் சென்னை தலைவர் வி.கே.டி பாலன் மற்றும் இன்ப்ளோ நிறுவனர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்வில் கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் கல்லூரி முதல்வர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மற்றும் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர்.

**Name of the Newspaper:** Dhinakaran

**Date** : 14.09.2024

**Programme** : Entrepreneurship Conference

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

## கேஎஸ்ஆர் கலை அறிவியல் கல்லூரியில்

# தொழில் முனைவோர் மாநாடு-2024



கேஎஸ்ஆர் கலை அறிவியல் கல்லூரி மேலாண்மை துறை சார்பில் நடந்த தொழில் முனைவோர் மாநாட்டில் பங்கேற்ற தலைவர் சீனிவாசன், தொழிலதிபர்கள் விகேடி பாலன் மற்றும் சுரேஷ்சம்பந்தம் உள்ளனர்.

திருச்செங்கோடு, அக்.5: திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) மேலாண்மை துறையின் சார்பாக, தொழில் முனைவோர் மாநாடு - 2024 நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சினிவாசன் தலைமையேற்று துவக்கி வைத்தார். கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பத்மநாபன் வரவேற்றார்.

முதன்மை திட்ட அலுவலர் பாலுசாமி, நிர்வாக இயக்குநர் மோகன் வாழ்த்தி பேசினர். நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக மதுரா டிராவல் சர்வீஸ், சென்னை தலைவர் வி.கே.டி. பாலன் மற்றும் கிஸ்ப்ளோ நிறுவனர் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். ...

**Name of the Newspaper:** Dhinamalar,

**Date** : 14.09.2024

**Programme** : Onam Celebration’s

**Organized by** : K S Rangasamy College of Arts and Science



திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கலை, அறிவியல் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது.

# கே.எஸ்.ஆர் கலை,அறிவியல் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம்

திருச்செங்கோடு,செப்.14-

திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஓணம் பண்டிகையை மாணவ, மாணவியர் உற்சாகமாகக் கொண்டாடினர்.

ஓணம் பண்டிகை குறித்த விவரங் களை மாணவ, மாணவியர் தெரிந்து கொள்ளும் வகையில் நிகழ்ச்சி கள் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் சீனிவாசன் ரங்கசாமி வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் இயக்குநர் (நிர்வாகம்) மோகன், முதன்மை திட்ட அலுவலர் பாலு சாமி, மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் பத்ம நாபன் அவர்கள் ஓணம் பண்டிகையின் சிறப்புகள் குறித்து பேசினார். கல்லூரி மாணவியர் கேரள மாநில பாரம்பரிய புடவையை அணிந்து வந்தனர். தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன.

கல்லூரி வளாகத்தில் அழகிய வண்ண மலர்களால் அத்தப்பூ கோலம் இட்டும், தோரணங்கள் அமைத்தும், மகாபலி அரசன் போன்று வேடமிட்டும் உற்சாகமாக ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர் கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் என பலரும் பங்கேற்றனர்.



ஆத்தூர் வெள்ளை விநா
சார்பில் அதி நவீன அல

**Name of the Newspaper:** Hindu Tamil Thisai,

**Date** : 12.09.2024

**Programme** : Mahakavi Bharathitar Day

**Organized by** : The Nectar Library



திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (தன்னாட்சி) பாரதியார் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

# கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியில் பாரதியார் நினைவு நாள் அனுசரிப்பு

**நாமக்கல்**

திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (தன்னாட்சி) மகாகவி பாரதியார் 103-வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ர.சீனிவாசன் வழிகாட்டுதல்படி நடைபெற்ற விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் வே.பத்மநாபன், மாணவர் திறன்மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே.ராதாகிருஷ்ணன் மற்றும் டீன்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், நூலகப் பணியாளர்கள் ஆகியோர் பாரதியார் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் கே.எஸ்.ஆர் பொறியியல் கல்லூரியின் இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் வி.தேவபாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பாரதியும் இசையும் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். கல்லூரியின் நூலகம் மற்றும் தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

**Name of the Newspaper:** Dhinaboomi

**Date** : 21.09.2024

**Programme** : International Conference

**Organized by** : School of Management Studies



திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கல்லூரியில்

# சர்வதேச மாநாடு

திருச்செங்கோடு, செப்.21- திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேலாண்மை துறை மற்றும் நாமக்கல் மாவட்ட தொழில் மையம் சார்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. இதில் உலகளாவிய வர்த்தக தொழில் வளர்ச்சியில் செயற்கைநுண்ணறிவின் பங்கு என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.

இதில் கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பத்மநாபன் தலைமை தாங்கினார். முதன்மை திட்ட அதிகாரி பாலுசாமி கலந்து கொண்டு பேசினார். திருச்சி இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பவன்குமார் சிங் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசும்போது, வணிக நிறுவனங்கள் மேலாண்மை கோட்பாடுகளையும், பொருளாதார கோட்பாடுகளையும் அடித்தளமாககொண்டு இன்றைய தொழில்நுட்பத்தை முறையாக பயன்படுத்துகின்ற போது உலகளாவிய வர்த்தகம் தலைசிறந்து விளங்கும் என்றார்.

இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக ஓமன் நாட்டை சேர்ந்த கல்வியாளர் கிருஷ்ணமூர்த்தி உலகளாவிய வணிகம் மற்றும் வேலைவாய்ப்பில் செயற்கை நுண்ணறிவின் பங்கு என்ற தலைப்பிலும், வரலட்சுமி சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பிலும், மலேசியா லோகேஸ்வரி வணிக மாதிரியை முன்னெடுத்து செல்லும் செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பிலும் பேசினர்.

இதில் நாமக்கல் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சகுந்தலா கலந்து கொண்டு பங்கு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

**Name of the Newspaper:** Dhinaboomi

**Date** : 28.09.2024

**Programme** : International Conference

**Organized by** : School of Commerce

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச மாநாடு



திருச்செங்கோடு செப் 28-

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறைகளும் எம்எஸ்எம்இ தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் கோவை இணைந்து 27.09.2024 அன்று சர்வதேச மாநாட்டை நடத்தியது.

இதில் வணிகவியல் மற்றும் கணினிபயன்பாட்டியல் துறையின் தலைவரும், வணிகவியல் துறைகளின் மனும் ஆகிய முனைவர் எஸ்.மகேஸ்குமார் வரவேற்றார் வழங்கினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் ர.சீனிவாசன் வாழ்த்துக்களோடு விழா தொடங்கியது.

இதில் கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வரி முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். இ.பார்த்திபன் நிர்வாக இயக்குனர் எல்இஒ டேப்ஸ் கோவை. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார்

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர். கோவை பழனிசாமி எம்எஸ்எம்இ பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ்குமார் உலகலாவிய தொழில் போட்டியில் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி திறன் மேம்படுவதற்கான சில முக்கிய அம்சங்களைப் பற்றி எடுத்துக்கூறினார்

சிறப்பு விருந்தினர் ஈரோடு. பட்டயக்கணக்காளர் ஸ்ரீ பிரதிப் நிதிகள் பெறுவதற்கு எம்எஸ்எம்இ-க்களுக்கு இன்றைய நவீன டிஜிட்டல் முறையின் மூலம் எளிய முறையில் கடன்கள் பெறுவது பற்றியும் முதலீட்டாளர்களுடன் நேரடி தொடர்பு கொள்வதையும் மாணவர்களுக்கு விளக்கினார். . அதனைத்தொடர்ந்து முனைவர் எத்தோபியா பேராசிரியர் ஏ தமிழரசு சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றது

என்றும் மார்க்கெட்டிங் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றும் பற்றியும் போட்டியிடும் திறன்கள் வாயிலாக சவால்களை கொண்டு எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என பேசினார்

தொடர்ந்து வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கே.விஸ்வநாதன் மற்றும் வணிகவியல் மற்றும் தொழில்முறை கணக்கியல் துறைத்தலைவர் முனைவர் கே.ரமேஷ் மாநாட்டின் முக்கிய நோக்கங்களைப் பற்றி மாணவர்கள் முன்னே உரையாற்றினார். மேலும் வணிகவியல் வங்கி மற்றும் காப்பீடு துறையின் தலைவர் முனைவர் எம்.தேவிஸ்ரீ மாநாட்டின் பல்வேறு கருத்துகளை தொகுத்து வழங்கினார். மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனையர் வே.பத்மநாபன் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் பல்வேறு கல்லூரியில் இருந்து சுமார் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆர்வமுடன் பின்னூட்டம் அளித்தனர் வணிகவியல் துறைகளின் சார்பாக மூன்றாமாண்டு மாணவர் நன்றி கூறினார்.

**Name of the Newspaper:** Malaimurasu

**Date** : 27.07.2024

**Programme** : National Workshop (IPR & IP)

**Organized by** : Department of Physics and Chemistry

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய பயிற்சிப்பட்டறை



**திருச்செங்கோடு செப் 28-** கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)யின் இயற்பியல் துறை மற்றும் வேதியியல் துறை இணைந்து சிஎஸ்ஐ ஆர் நிதி உதவியுடன் அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் ஸ்டாட்டப் மேலாண்மைக் குறித்த இரண்டு நாட்கள் தேசிய பயிற்சிப்பட்டறை கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஆர்.சினிவாசன், துணைத் தலைவர் கே.எஸ்.சச்சின் ஆகியோரின் வாழ்த்துக்களோடு செப்டம்பர் 26,27 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சிபட்டறையின் முதல் நாள் தொடக்கமாக இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் ஜி.சுரேஷ்குமார் வரவேற்றார் கல்லூரி முதல்வர் முனைவர் வி.பத்மநாபன் தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றி வைத்து அறிவுசார் சொத்துரிமையைப் பற்றி உரையாற்றினார்.

இந்திய காப்புரிமை மற்றும் வடிவமைப்பு கழகத்தின் துணைக் கட்டுப்பாட்டாளர் எ.ராசா சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு அறிவுசார் சொத்துரிமை மற்றும் காப்புரிமையின் முக்கியத்துவத்தை மாணவவர்களுக்கு எடுத்துக் கூறினார். தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் முனைவர் எஸ்.கே.பாலசண்முகம் அறிவுசார் சட்டப் பரிணாமங்களைப் பற்றி எடுத்துக்கூறி னார் இரண்டாம் நாள் பயிற்சிப் பட்டறையில் இந்திய காப்புரிமை மற்றும் வடிவமைப்பு கழகத்தின் துணைக்கட்டுப்பாட்டாளர் எஸ்.உதயசங்கர் பதிப்புரிமை மற்றும் புவிசார் குறியீடுகளின் வகைகளையும் அதன் முக்கியத்துவங்களையும் விளக்கினார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பி.ராஜேஷ்குமார் புத்தொழில் தொடங்குவதில் காப்புரிமைகளின் தேவைகளைப் பற்றி எடுத்துரைத்தார். சி எஸ் ஐ ஆர் சிஈ சி ஆர் ஐ யின் மூத்த விஞ்ஞானி முனைவர் ஏ.. பாண்டிகுமார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் புதுமைகளை பற்றி பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின் நிறைவாக வேதியியல் துறைத்தலைவர் முனைவர் ஆர் பி.சுரேஷ் ஜெயக்குமார் நன்றி கூறினார் இந்த

. இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய பயிற்சிப் பட்டறையில் 250 மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்

**Name of the Newspaper:** Malaimurasu

**Date** : 27.07.2024

**Programme** : Internet Awareness – Conference

**Organized by** : K S R Educational Institutional

# கே.எஸ்.ஆர். கல்லூரியில் இணையவழி குற்றங்கள் பாதுகாப்பு மாநாடு



திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இணையவழி குற்றங்கள் குறித்த பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்றோர்.

**திருச்செங்கோடு, ஜூலை 27:** தேசிய இணையவழி குற்றங்கள் பாதுகாப்பு மாநாடு கே.எஸ்.ஆர். கல்லூரியில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இணையப் பாதுகாப்புத் துறையில் உள்ள முக்கியமான சிக்கல்கள், முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்க வல்லுநர்கள், கொள்கை, தொழில்துறை தலைவர்களை ஒன்றிணைத்து நாடு முழுவதிலுமிருந்து பங்கேற்பாளர்களை ஈர்க்கும் இரண்டு நாள் நிகழ்ச்சியானது பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றது.

மாநாட்டை கல்வி நிறுவனங்களின் தலைவர் ஆர்.சீனிவாசன் தொடங்கி வைத்தார். தேசிய சைபர் செக்யூரிட்டி ரிசர்ச் கவுன்சில் மற்றும் இந்தோ ரஷியன் ரிசர்ச் கவுன்சில் நிறுவனங்களுடன் இணைந்து இம்மாநாட்டை கே.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரி நடத்தியது.

இரண்டாம் நாள் உச்சி மாநாட்டை முதல்வர் எம். வெங்கடேசன், நிர்வாக இயக்குநர் வி.மோகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

தேசிய சைபர் செக்யூரிட்டி ரிசர்ச் கவுன்சில் துணைத் தலைவர் காளிராஜ் நாயுடு மாநாட்டின் நோக்கம் குறித்து விவரித்தார். திருச்செங்கோடு கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி ஆர்.மாலதி சிறப்புரையாற்றினார்.

இணையவழி குற்ற பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உண்மையான வழக்கு ஆய்வுகள் குறித்தும், இணையவழி குற்றங்களை கட்டுப்படுத்துவதில் காவல் துறை, நீதித் துறை எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்துரைத்தார்.

இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதில் தனிப்பட்ட பொறுப்பை வலியுறுத்தினார்.

மாநாட்டில் பல்வேறு அமர்வுகளில் கருத்துரையாளர்கள் பேசினர். பொறியியல் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**Name of the Newspaper:** Malaimurasu

**Date** : 14.07.2024

**Programme** : Free Medical Camp

**Organized by** : KSR Institute of Dental Science and Research



திருச்செங்கோட்டில்

# இலவச மருத்துவ முகாம்!

திருச்செங்கோடு, ஜூலை.25– கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்கள் மற்றும் பிராக்கில் இன்டக்கிரேடெட் ஹெல்த் சென்டர், டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக்கல்லூரியும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனை முகாம் திருச்செங்கோட்டில் நடத்தப்பட்டது. கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர். சீனிவாசன் மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். மகளிர் கல்லூரியின் முதல்வர் மா.கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார்.

தலைமை மனித வள அதிகாரி, என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், எஸ்.வி. சுப்பரமணியன், முதன்மை மருத்துவ அலுவலர், பிராக்கில் இன்டக்கிரேடெட் ஹெல்த் சென்டர், பொள்ளாச்சி டாக்டர் எம்.கே.பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டு மூட்டுவலி, தோல்நோய், குடல்நோய், உடல்பருமன், மனஅழுத்தம், புற்றுநோய் அறிகுறிகள் மற்றும் அதை குணப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் பிராக்கில் இன்டக்கிரேடெட் ஹெல்த் சென்டர் மூலம் வழங்கப்படும் மருத்துவ தெரபிகள் குறித்து சிறப்பு மருத்துவ உரையாற்றினார்கள்.

**Name of the Newspaper:** Indian Express

**Date** : 14.07.2024

**Programme** : National Cyber Security Research Council

**Organized by** : K S Rangasamy College of Engineering

THE NEW INDIAN EXPRESS 3/14

**EXPRESS READ**



KSR College of Engineering, Tiruchengode, hosted a national cyber security summit recently. College principal, Dr M Venktesan, Dr E Khalieraaj Naidu, director of National Cyber Security Research Council, Vice President IRITA Indo-Russian IT Association spoke during the event | EXPRESS

**Name of the Newspaper:** Dhinamani

**Date** : 17.07.2024

**Programme** : Inauguration on TR Sundaram's Film Forum & One Day National Seminar

**Organized by** : Department of Visual Communication



# கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியில் கருத்தரங்கம்



திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கலை. அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்றோர்.

**திருச்செங்கோடு, ஜூலை 17:** கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியில் மாடர்ன் தியேட்டார் உரிமையாளர் டி.ஆர். சுந்தரத்தின் பிறந்த நாளை முன்னிட்டு தேசிய அளவிலான கருத்தரங்கம், புத்தகம் வெளியீடு, டி.ஆர்.சுந்தரம் சினிமா கழகம் தொடக்க விழா ஆகியவை கல்லூரி கலையரங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் காட்சி தொடர்பியல் துறை சார்பில், நடைபெற்ற இவ் விழாவில் கே.எஸ்.ஆர்.கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம், தலைமை திட்ட அதிகாரி பாலுசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

கே.எஸ்.ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் பத்மநாபன், தமிழக கலாசாரம், பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பதில் சினிமாவின் பங்கு குறித்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் சண்முகராஜா, தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஆவணப்பட இயக்குநர் டி.கே.வி. ராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். அதில் கல்லூரி முதல்வர்கள், இயக்குநர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் டி.ஆர்.சுந்தரம் சினிமா கழகம் தொடங்கி வைக்கப்பட்டது. காட்சி தொடர்பில் துறை மாணவர்கள் பொறுப்பாளர்கள் பதவியேற்றனர். அதைத் தொடர்ந்து, 'தமிழ் சினிமாவின் மரபு, முன்னோடிகளை நினைவு கூறுதல்' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரைகள் ஐஎஸ்பிஎன் புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. பின்னர் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தனர். ஏற்பாடுகளை காட்சி தொடர்பியல் துறைத் தலைவர், ஒருங்கிணைப்பாளர் பா.கணேஷ் பிரபு செய்திருந்தார். உதவி பேராசிரியை காவ்யா நன்றி கூறினார். உதவி பேராசிரியர் ஆதித்யா கிருஷ்ணன் ஒருங்கிணைத்தார்.

**Name of the Newspaper:** **The Hindu**

**Date** : **04.07.2024**

**Programme** : **First Year PG Inauguration programme Seminar**

**Organized by** : **K S Rangasamy College of Arts and Science**

## K S R College of Arts and Science (Autonomous)



The first-year PG programmes at K.S.R CAS were launched with great excitement and supervision from the Chairman, Mr.R.Srinivasan and also Dr. Akila Muthuramalingam whose guidance always gives us success. The program began with a welcome address by Dr. M. Prasanna Rajeshkumar, V. P. Dr. V. Padmanabhan, Principal, gave the presidential address and introduced the deans and heads of several departments to the new students. Dr. S. Balusamy, Chief Strategic Officer, and Dr. K. Sathiyasekar, Director-Admissions, KSR, congratulated the attendees. The Chief Guest, Dr. R. Nagarajan, Former Prof. and HOD Economics, PSG College of Arts and Science, CBE, encouraged the students to use the resources available at KSRCAS and advised them to thrive in their careers. He stated that young India should be aware of the economics and that it is their obligation to help grow our country's economy. The students provided feedback because the event was well-organized, and the principal guest's inherent motivation sparked the students' enthusiasm. The event, which drew 200 parents and teachers, showed the institution's strong community support.

**Name of the Newspaper:** The Hindu

**Date** : 10.07.2024

**Programme** : Develop Skills based on Industry

**Organized by** : K S R Educational Institution



# Develop skills based on industry needs

Namakkal, July 10: Develop your skills in tune with the industry needs as a major chunk of them scout for suitable hands with innovative talents based on industry requirements.

This was the focal point stressed by the delegates at the 'Orbit 2024' event organised by Career Development Center at KSR Educational Institutions at Tiruchengode. Earlier, CEO Dr Akila Muthuramalingam honoured the resource persons drawn from reputed industries with a memento.

During the deliberations, the resource persons pointed out the ways and means to meet the industry needs and honing the skills besides internships and inplant training, undertaking projects, case studies and corporate mentorship. Over 3000 odd students benefited from the programme which gave lots of info for them to take it forward during their course of study.

Later, the students raised some valuable questions and got their doubts clarified from the resource persons while the students gave positive feedback about the event.

Principals, directors, placement officers were present on the occasion. Dr Gopinath Subramani, Director, Career Development Centre proposed a vote of thanks.


**NAME CHANGE**

I, Rajmohan, S/O.Dhaveedhu, born on 17.07.1979, (Place of birth: Killaikavattam, Nagapattinam District) Residing at 7/1612A, Sun Garden, Pillaiyar Kovil Street, Periya Pommanayakkan Palayam, VTC:Nerippericha1, PO:Puluvapatti, Tiruppur–641602. shall henceforth be known as **RAJMOHAN, S/o. Dhaveethu.**

Rajmohan, S/O.Dhaveedhu

**NAME CHANGE**

I, AHAMED RILWAN MOHAAIDEEN AHAMED AMEEN HAROON RASHEED, born on 03-10-2005, (Place of birth: THANJAVUR) Residing at 84/A, RAMRAJ NAGAR, KOVILPALAYAM, SATHY ROAD, SARKARSAMAKULAM, COIMBATORE-641107. shall henceforth be known as **AHAMED RILWAN MOHAAIDEEN HAROON RASHEED.**

AHAMED RILWAN MOHAAIDEEN AHAMED AMEEN HAROON RASHEED

**NAME CHANGE**

**NAME CHANGE**

**Name of the Newspaper:** Makkal Kural

**Date** : 09.07.2024

**Programme** : Develop Skills based on Industry

**Organized by** : K S R Educational Institution

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு



# கேஎஸ்ஆர் கல்வி நிறுவனத்தில் தொழில் வாய்ப்பு விளக்க முகாம்

நாமக்கல், ஜூலை 9–

திருச்செங்கோடு கேஎஸ்ஆர் கல்வி நிறுவனத்தின் தொழில் வளர்ச்சி மையம் சார்பில் "ஆர்பிட் 2024" என்ற தலைப்பில் தொழில் வாய்ப்பு குறித்த விழிப்புணர்வு விளக்க முகாம் கல்வி நிறுவன வளாகத்தில் நடைபெற்றது.

இந்த மெகா நிகழ்வு 12 அரங்குகளில் பல புகழ்பெற்ற தொழில்துறைகளைச் சேர்ந்த 37 தொழில் வல்லுநர்களால் நடத்தப்பட்டது. இதில் 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். கல்வி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம் தொழில் துறை ஊக்குவிப்பாளர்களை வரவேற்றார். பின்னர் பிரதிநிதிகள் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், புதிய வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு, திறன் மேம்பாடு நடவடிக்கைகள், வேலைவாய்ப்புகளை வழங்குதல், ஆலையில் பயிற்சிகள், திட்டங்கள், வழக்கு ஆய்வுகள், பெருநிறுவன வழிகாட்டுதல் போன்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

பிரதிநிதிகளின் உரைக்குப் பிறகு, மாணவர்கள் சில கேள்விகளை எழுப்பி, தங்கள் எல்லாக் களங்களிலும் தங்கள் திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர்.

மாணவர்கள் தங்களது திறமையை வளர்த்துக்கொள்ள இது பயனுள்ளதாக இருந்ததாக காலை அமர்வு குறித்து கருத்து தெரிவித்தனர். பிற்பகல் அமர்வில், தலைமை நிர்வாக அதிகாரி, இயக்குநர்கள் மற்றும் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அலுவலர்கள் ஆகியோரின் அமர்வு நடைபெற்றது.

இதில் பிரதிநிதிகள் "ஆர்பிட் 2024" நிகழ்வில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி ஆலோசனைகளை வழங்கினர். மாணவர்களின் நன்மை, மாணவர்கள் பணிக்கு வருவதற்கு முன் அவர்களை எப்படி தொழில்துறைக்கு தயார்படுத்துவது என்பது குறித்து முதல்வர்கள் சில ஆலோசனைகளை கேட்டனர். பின்னர், கல்லூரியின் தொழில் மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் கோபிநாத் சுப்ரமணி, இந்த மெகா நிகழ்வை ஏற்பாடு செய்த கல்லூரி நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தார்.

09/07/2024 Coimbatore Pg 08

**Name of the Newspaper:** Malaimurasu

**Date** : 09.07.2024

**Programme** : Develop Skills based on Industry

**Organized by** : K S R Educational Institution

திருச்செங்கோட்டில்

# கே.எஸ்.ஆர்.கல்வி நிறுவனத்தில் தொழில் வளர்ச்சி கருத்தரங்கம்!

திருச்செங்கோடு, ஜூலை 9– திருச்செங்கோடு கே எஸ் ஆர் கல்வி நிறுவனங்களின் வளாகத்தில் கே எஸ் ஆரின் தொழில் வளர்ச்சி மையம், கல்வி நிறுவனங்கள் 'ஆர்பிட் 2024' என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம், அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் தொழில் நுட்பங்களின் போக்கு, தொழில்களின் தேவைகள், நிறுவனங்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது, புதிய வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு, திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், இன்டர்ன்ஷிப் வழங்குதல், ஆலைப்பயிற்சிகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் பிரதிநிதிகள் மாணவர்களிடையே பேசினார்கள். பின்னர் நடந்த நிகழ்ச்சியில் தலைமை நிர்வாக அதிகாரி, அதிபர்கள், இயக்குனர்கள், மற்றும் பயிற்சி வேலைவாய்ப்பு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். பிரதிநிதிகள் 'ஆர்பிட் 2024' குறித்தும் பேசினார்கள். நிகழ்ச்சியில் மாணவர்களின் நன்மை, மாணவர்கள் பணிக்கு வருவதற்கு முன்பு அவர்களை எப்படி தொழில் துறைக்கு தயார்படுத்துவது குறித்து கல்லூரி முதல்வர்கள் ஆலோசனை வழங்கினர். இதனைத் தொடர்ந்து தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் அகிலா முத்துராமலிங்கம் பிரதிநிதிகளுக்கு நினைவு பரிசு வழங்கினார்.

முடிவில் தொழில் மேம்பாட்டு மையத்தின் இயக்குனர் கோபிநாத் சுப்பிரமணி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் 12 அரங்குகளில் 37 தொழில் துறைகளைச் சேர்ந்தவர்கள் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். மேலும் அனைத்து பிரதிநிதிகள், அதிபர்கள், இயக்குனர்கள், பயிற்சி வேலை வாய்ப்பு அலுவலர்கள், பி.டி.பி குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**Name of the Newspaper:** Dhinamani

**Date** : 17.07.2024

**Programme** : Weightlifting – District Level Winner

**Organized by** : K S R Educational Institution

# மாவட்ட அளவிலான பளுதூக்கும் போட்டி: திருச்செங்கோடு கல்லூரி மாணவர் முதலிடம்

**அம்பாசமுத்திரம், ஜூலை 17:** திருநெல்வேலி மாவட்டம் அகஸ்தியர்பட்டியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான பளுதூக்கும் போட்டியில் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த திருச்செங்கோடு கல்லூரி மாணவர் முதலிடம் பிடித்தார்.

கேம்பிரிட்ஜ் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இப்போட்டியை தாளாளர் ராபர்ட் தொடக்கிவைத்தார். ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர் ராஜேந்திரன், மாஸ்டர் மகாராஜன் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர்.

போட்டியில் தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து பல்வேறு பள்ளி, கல்லூரிகள், உடற்பயிற்சிக் கழகங்களிலிருந்து 10 வயதுக்கு மேற்பட்ட 200-க்கும் மேற்பட்ட இருபாலரும் பங்கேற்றனர்.



109 கிலோ எடைப் பிரிவில் முதலிடம் பிடித்த சிவபாலன்.

இதில், அம்பாசமுத்திரம் நேதாஜி உடற்பயிற்சிக் கழக உறுப்பினரான கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த சிவபாலன் 109 கிலோ எடைப் பிரிவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார். இவர், திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கல்லூரியில் பி.பி.ஏ. 2ஆம் ஆண்டு படித்து வருகிறார்.

திருநெல்வேலி அட்லஸ் உடற்பயிற்சிக் கழகம் 2ஆம் இடம் பிடித்தது. நேதாஜி உடற்பயிற்சிக் கழகம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது.

பரிசளிப்பு விழாவில் அம்பாசமுத்திரம் அரசு வழக்குரைஞர் காந்திமதிநாதன், தென்காசி வட்டாட்சியர் (குடிமைப் பொருள் வழங்கல்) பட்டமுத்து ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ், பதக்கங்களை வழங்கினர்.

ஏற்பாடுகளை காமன்வெல்த் பளுதூக்கும் வீரர் கருத்தப்பாண்டி, தேசிய பளுதூக்கும் வீரர்கள் முத்தையா, சாமிநாதன் ஆகியோர் தலைமையில் நேதாஜி உடற்பயிற்சிக் கழகத்தினர் செய்திருந்தனர்.

தினமணி
Thu, 18 July 2024
https://epaper.dinamani.com/c/75463044

**Name of the Newspaper:** Dhinamani

**Date** : 24.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

தினமணி

Tue, 25 June 2024
https://epaper.dinamani.com/c/75317199

# கே.எஸ்.ஆர். கல்லூரியில் முதலாண்டு வகுப்புகள் தொடக்க விழா

**திருச்செங்கோடு, ஜூன் 24:** கே.எஸ். ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

கல்லூரி துணை முதல்வர் பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப் பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர். கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்றும் கூறினார். தொடர்ந்து, கல்லூரியின் அனைத்துத் துறைகளின் முதன்மையர்கள், துறைத் தலைவர்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் இயக்குநர் மோகன், மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் வே.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவுக்கு தன்னம்பிக்கைப் பேச்சாளர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உள்ளத்தனையது உயர்வு' என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கி, கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்றும், மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர், ஆசிரியர்களுக்கு முக்கியப் பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும் என்றும் கூறினார்.

எஸ்.ஐ.பி. ஒருங்கிணைப்பாளர், இயற்பியல் துறைத் தலைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர் கலந்துகொண்டனர்.

**Name of the Newspaper:** **Malai Deepam**

**Date** : **25.06.2024**

**Programme** : **First Year UG Inauguration programme**

**Organized by** : **K S Rangasamy College of Arts and Science**

மாலை தீபம்
மாலை நாளிதழ்
25.06.2024 செவ்வாய்க்கிழமை

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கவிழா

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)யில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான 30-வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா நடைபெற்றது. கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன ராஜேஷ் குமார் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப் பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர் கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும் துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் கல்வி இயக்குநர் மோகன் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அப்போது மாணவர்கள் தன்னம்பிக்கையோடு சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினர்.

இவ்விழாவிற்கு தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உள்ளத்தனையது உயர்வு' என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அப்போது கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்று பாராட்டினார்.

மேலும் நமது தாய்மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும் என்று கூறினார்.

மாணவர்கள் ஆடம்பரத்தையும், செல்போன் பயன்பாட்டையும் தவிர்ப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் பொறுப்புள்ள குடிமகனாக திகழ முடியும் என்றும் அறிவுறுத்தினார். அதன்பின்னர் எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார்.

இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.

**Name of the Newspaper:** Thinathanthi

**Date** : 25.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம்




**திருச்செங்கோடு ஜூன் 25-**

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான 30-வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா நேற்று நடைபெற்றது.

கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்றார் கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப் பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர் கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் கூறினார். மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும் துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் கல்வி இயக்குநர் மோகன் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். விழாவில் தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உள்ளத்தனையது உயர்வு' என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அப்போது கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்று பாராட்டினார். மேலும் நமது தாய்மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும் என்று கூறினார். எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் வெங்கடேஷ் நன்றிகூறினார் இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



**Name of the Newspaper:** Malaimurasu

**Date** : 25.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

## திருச்செங்கோடு

# கே.எஸ்.ஆர்.கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா!

திருச்செங்கோடு, ஜூன்.25

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2024–2025 ஆம் ஆண்டிற்கான 30வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா கே. எஸ்.ஆர்.கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர்.சீனிவாசன் வழிகாட்டுதலின் பேரில் நேற்று நடைபெற்றது. கல்லூரி துணை முதல்வர் முனைவர். பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர். வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும் துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார். தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் இயக்குநர் மோகன், மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். அப்போது மாணவர்கள் தன்னம்பிக்கையோடு சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினர். இவ்விழாவிற்குதன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர். ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார். அதன்பின்னர் எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல் துறைத்தலைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர் .




திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கவிழாவில் கல்லூரி முதலவர் பத்மநாபன், கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி அகிலா முத்துராமலிங்கம், இயக்குனர் மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**Name of the Newspaper:** Dhinakaran

**Date** : 26.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கவிழா




ஈரோடு ஜூன் 26

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)யில் 20242025 ஆம் ஆண்டிற்கான 30வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா நடைபெற்றது. கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல்கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப் பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர் கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும் துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் கல்வி இயக்குநர் மோகன் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அப்போது மாணவர்கள் தன்னம்பிக்கையோடு சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினர்.

இவ்விழாவிற்கு தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உள்ளத்தனையது உயர்வு' என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அப்போது கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்று பாராட்டினார். மேலும் நமது தாய்மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும் என்று கூறினார். மாணவர்கள் ஆடம்பரத்தையும், செல்போன் பயன்பாட்டையும் தவிர்ப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் பொறுப்புள்ள குடிமகனாக திகழ முடியும் என்றும் அறிவுறுத்தினார். அதன்பின்னர் எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

**Name of the Newspaper:** Makkal Mugam

**Date** : 26.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கவிழா




திருச்செங்கோடு, ஜூன்.26

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) யில் 20242025 ஆம் ஆண்டிற்கான 30வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா நடைபெற்றது. கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போதுமாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப்பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர் கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள்அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் கூறினார்.மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும்துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார்.

கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிமுனைவர் அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் கல்வி இயக்குநர் மோகன் மற்றும்மாணவர் திறன் மேம்பாட்டுஇயக்குநர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். அப்போது மாணவர்கள் தன்னம்பிக்கையோடு சவால்களைஎதிர்கொண்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினர்.

இவ்விழாவிற்கு தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உள்ளத்தனையது உயர்வு' என்னும் தலைப்பில்சிறப்புரைவழங்கினார். அப்போது கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களைஉருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்று பாராட்டினார். மேலும் நமது தாய்மொழியின்முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள்பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும்என்று கூறினார். மாணவர்கள் ஆடம்பரத்தையும், செல்போன் பயன்பாட்டையும் தவிர்ப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் பொறுப்புள்ள குடிமகனாக திகழ முடியும் என்றும்அறிவுறுத்தினார்.

அதன்பின்னர் எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல்துறைத்தலைவர் முனைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில்இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.

**Name of the Newspaper:** Dhina Tamilagam

**Date** : 26.06.2024

**Programme** : First Year UG Inauguration programme

**Organized by** : K S Rangasamy College of Arts and Science



# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா!






ஈரோடு, ஜூன்.26

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)யில் 2024 - 2025ஆம் ஆண்டிற்கான 30வது முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா நடைபெற்றது.

கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன ராஜேஷ்குமார் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். அப்போது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவர்களுக்கான பணி வாய்ப்பினைப் பெற்று செல்வதற்கான சிறந்த களமாக கே.எஸ்.ஆர் கல்லூரி இருக்கும் என்றும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றும் கூறினார். மேலும் கல்லூரியின் அனைத்துறைகளின் டீன்கள் மற்றும் துறைத் தலைவர்களை அறிமுகப்படுத்தினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அகிலா முத்துராமலிங்கம், கல்லூரியின் கல்வி இயக்குநர் மோகன் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டு இயக்குநர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அப்போது மாணவர்கள் தன்னம்பிக்கையோடு சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினர்.

இவ்விழாவிற்கு தன்னம்பிக்கைப் பேச்சாளர் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உள்ளத் தனையது உயர்வு என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அப்போது கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனம் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வி சாம்ராஜ்யம் என்று பாராட்டினார். மேலும் நமது தாய்மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்றும், மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடந்தால் வாழ்வில் உயரத்தை அடைய முடியும் என்று கூறினார்.

மாணவர்கள் ஆடம்பரத்தையும், செல்போன் பயன்பாட்டையும் தவிர்ப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் பொறுப்புள்ள குடிமகனாக திகழ முடியும் என்றும் அறிவுறுத்தினார்.

அதன்பின்னர் எஸ்.ஐ.பி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் வெங்கடேஷ் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.